24.06.2025 S.C.No.138 of 2017 P.W.52 – Anandhakumar

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1 to A5 present. A6 absent and his absence condoned as u/s. 317 Cr.P.C. petition filed and allowed.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 02.45 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: எ.த.சா.ஆ.4 ஆவணத்தில் 3 வது Column ல் Admit என்ற இடத்தில் 20.06.2015 என்று பொய்யான தகவல் எழுதப்பட்டுள்ளது என்றால்?

ப: 20.06.2015 என்று தவறாக எழுதப்பட்டுள்ளது.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையத்தின் மருத்துவமனை தகவல் பதிவேட்டில் (எ.த.சா.ஆ.4) ஷமீல் பாஷாவின் Absconding குறித்து எழுதியுள்ள தகவல்களில் எந்த தேதியில் எந்த நேரத்தில் ஷமீல் பாஷா கண்டுபிடிக்கப்பட்டார், எவரால் கண்டுப்பிடிக்கப்பட்டார், எத்தனை மணிக்கு கண்டுப்பிடிக்கப்பட்டார், எந்த இடத்திலிருந்து கண்டுப்பிடிக்கப்பட்டார் என்கிற தகவல் இல்லை என்றால் ?

ப: சரிதான்.

கே: 19.06.2015 அன்று மாலை 16.30 மணிக்கு உள்நோயாளியாக ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஷமீல் பாஷாவை எந்த காவல் அதிகாரிகளும் நேரடியாக சந்தித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: 19.06.2015 அன்று பகல் 13.00 மணி முதல் மாலை 16.30 மணி வரை இறந்துபோன ஷமீல் பாஷா அவரது மாமனாரான கௌஷ் பாஷா என்பவரின் பொறுப்பில் இருந்தார் என்றால் ?

ப: ஆஜர் முச்சிலிக்காவின் படி சரிதான்.

கே: 19.06.2015 அன்று பகல் 13.00 மணி முதல் மாலை 16.30 மணி வரை ஷமீல் பாஷாவிற்கு கௌஷ் பாஷாவால் காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்றால் ?

ப: காயங்கள் ஏற்பட்டிருந்தால் மருத்துவமனையில் மருத்துவரிடம் ஷமீல் பாஷா கூறியிருப்பார்.

கே: அப்படியானால் அதனை எந்த காவல் அதிகாரி ஷமீல் பாஷாவிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறார்கள்?

ப: ஷமீல் பாஷாவை எந்த காவல் அதிகாரியும் விசாரிக்கவில்லை. வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

கே: 19.06.2015 அன்று பகல் 13.00 மணி முதல் மாலை 16.30 மணி வரை ஷமீல் பாஷாவை வைத்திருந்த கௌஷ் பாஷாதான் ஷமீல் பாஷாவிற்கு காயங்களை ஏற்படுத்தியுள்ளார், அது குறித்து எந்த காவல் துறை அதிகாரியும் ஷமீல் பாஷாவிடம் வாக்குமூலம் பெறவில்லை, தாங்களாவது அவ்வாறு ஷமீல் பாஷாவிடமிருந்து வாக்மூலம் பெறாததற்கான காரணத்தை புலன் விசாரணை செய்து பதிவு செய்யாததால் கௌஷ் பாஷாதான், ஷமீல் பாஷாவிற்கு காயங்களை ஏற்படுத்தியிருக்கிறார் என்று கூறுகிறேன், உங்களது புலன் விசாரணையில் அது குறித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: இல்லை.

கே: 19.06.2015 இரவு முதல் 20.06.2015 மாலை 04.00 மணி வரை அ.த.சா.ஆ.48 இறந்துபோன ஷமீல் பாஷா எவருடைய பொறுப்பில் இருந்தார் என்ற தகவல் ஆவணம் அ.த.சா.ஆ.48 ல் இல்லை என்றால் ?

ப: சரிதான்.

கே: 19.06.2015 அன்று இரவு Absconding ஆன ஷமீல் பாஷா 20.06.2015 காலை ஆம்பூர் ஆய்வாளரை சந்தித்து மருத்துவமனையில் ஷமீல் பாஷா இருப்பதாக கூறியிருந்தது கௌஷ் பாஷாதான் ஷமீல் பாஷாவை 19.06.2015 அன்று இரவு முதல் 20.06.2015 அன்று மாலை ஆம்பூர் அரசு மருத்துவமனையில் விடும்வரை ஷமீல் பாஷாவை அடித்து துன்புறுத்தி பல காயங்களை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் ?

ப: அது குறித்து நான் விசாரிக்கவில்லை.

கே: அ.த.சா.ஆ.47-ல் Accident register of Government Hospital, Ambur என்ற ஆவணத்தில் தேதியிடப்பட்டுள்ளதா பார்த்து சொல்லுங்கள்?

ப: தேதியிடப்படவில்லை.

கே: அ.த.சா.ஆ.47 ல் ஷமீல் பாஷாவிற்கு மூன்று காயங்கள் இருப்பதாக மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்?

ப: சரிதான்

கே: அ.த.சா.ஆ.60-ல் External injuries என்று பத்து காயங்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: அதனால் ஷமீல் பாஷா Absconding ஆன காலக்கட்டத்தில் அவரது மாமனார் கௌஷ் பாஷாவால் காயப்பட்டுத்தப்பட்டுள்ளார், அதை மறைப்பதற்காக 20.06.2015 அன்று காலை ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு சென்று ஷமீல் பாஷா மருத்துவமனையில் இருப்பதாக பொய்யான தகவலை கூறியிருக்கிறார் என்றால்?

ப: அது குறித்து நான் விசாரிக்கவில்லை.

கே: 19.06.2015 இரவு முதல் காணாமல் போன ஷமீல் பாஷா 20.06.2015 அன்று மாலை 04.00 மணிக்கு கண்டுப்பிடிக்கப்பட்டதாகவோ அவர் Male ward–ல் இருந்ததாகவோ அ.த.சா.ஆ.48 ல் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் ஷமீல் பாஷா Male ward–ல் இருந்ததாக கூறியிருப்பதற்கான எந்த ஆவணம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: தங்களால் வேலூர் மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட மருத்துவ ஆவணங்கள் அ.த.சா.ஆ.65, இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையிலிருந்து மருத்துவ ஆவணங்கள் தங்களால் பெறப்பட்டதா?

ப: நான் பெறவில்லை. எனக்கு பின்னால் வந்தவர்கள் பெற்றிருப்பார்கள்.

கே: வேலூர் மருத்துவமனையிலிருந்து மருத்துவ ஆவணங்களை தாங்கள்தானே பெற்றீர்கள்?

ப: ஆம்.

கே: தங்களால் பெறப்பட்ட ஆவணங்கள் உண்மை நகலா அல்லது புகைப்பட நகலா என்றால் ?

ப: Covering letter–ஐ தவிர மற்றவை சான்றொப்பமிடப்பட்ட புகைப்பட நகலாகும்.

கே: அ.த.சா.ஆ.47–ல் "Assaulted by one known person" என்று இருக்கிறதா என்றால் ?

ப: உள்ளது.

கே: அ.த.சா.ஆ.51ல் 6 என்ற எண் ஏற்கனவே அந்த ஆவணத்தில் எழுதிய மருத்துவரல்லாத வேறு ஒருவருடைய கையொப்பமாக தெரிகிறது என்றால்?

ப: கையொப்பத்தை ஒப்பிட்டு பார்த்து சொல்லக்கூடிய திறன் இல்லை.

கே: அ.த.சா.ஆ.51ல் 22.06.2015 என்று எழுதப்பட்ட பக்கத்தில் "Assault by 6 known persons" என்று உள்ளதா?

ப: உள்ளது.

கே: அ.த.சா.ஆ.47ல் One known person என்றும் அ.த.சா.ஆ.51ல் 6 known persons என்றும் வெவ்வேறாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு அ.த.சா.ஆ.47லும் அ.த.சா.ஆ.51லும் வெவ்வேறான நபர்கள் Assault செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பது குறித்து மருத்துவர்களிடம் கேட்டு வாக்குமூலம் பதிவு செய்துள்ளீர்களா ?

ப: அது குறித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

கே: அ.த.சா.ஆ.47ல் Assault செய்ததாக கூறப்படும் தேதி 18.06.2015 என்றும் அ.த.சா.ஆ.51ல் Assault செய்த நாளும் நேரமும் 19.06.2015 at 08.00 P.M. என்று உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: 26.06.2015 இரவு பெறப்பட்டதாக சொல்லப்படும் இரண்டாவது புகார் ஆய்வாளர் கோவிந்தசாமியால் எந்த இடத்தில் வைத்து பெறப்பட்டதாக ஆய்வாளர் கோவிந்தசாமி அ.த.சா.ஆ.79 ல் குறிப்பிட்டிருக்கிறார்?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் வைத்து பெற்றதாக குறிப்பு உள்ளது.

கே: முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ள இரண்டாவது புகாரில் புகார்தாரரான அலி அக்பரால் எந்த தேதியில் கொடுத்ததாக புகாரில் தேதியிடப்பட்டுள்ளதா ?

ப: முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள புகாரில் அலி அக்பரால் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

கே: மேற்கண்ட இரண்டாவது புகாரைக்கொண்டு முதல் தகவல் அறிக்கையை ஆய்வாளர் கோவிந்தசாமியால் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், தேதியிடப்படாத அந்த புகார் எவருக்கு முகவரியிட்டு எழுதப்பட்டுள்ளது?

ப: காவல் துணைக்கண்காணிப்பாளர் நகர காவல் நிலையம், ஆம்பூர் அவர்களுக்கு முகவரியிடப்பட்டுள்ளது.

கே: அவ்வாறு துணைக்கண்காணிப்பாளருக்கு முகவரியிட்ட தேதியிடப்படாத அந்த புகாரில் துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்தின் முத்திரையோ அல்லது துணைக்கண்காணிப்பாளரின் சுருக்கொப்பமோ அல்லது ஒப்பமோ ஏதேனும் உள்ளனவா?

ப: இல்லை.

கே: 26.06.2015 அன்று இரவு 12.00 மணிக்கு மேல் பெறப்பட்டதாக சொல்லப்படும் முதல் புகாரினை பெற்று அதில் எதிரிகளின் பெயர் இல்லை என்பதனால் தேதியிடப்படாத ஒரு புகாரினை பெற்றதாக கோவிந்தசாமி தயாரித்திருக்கிறார் என்றால்?

ப: அது குறித்து நான் விசாரிக்கவில்லை.

கே: தாங்கள் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பின் ஏதேனும் வரைபடம் தயாரித்தீர்களா?

ப: இல்லை.

கே: ஏற்கனவே கோவிந்தசாமி (அ.த.சா.ஆ.80) தயாரிக்கப்பட்ட மாதிரி வரைபடத்தில் சம்பவம் நிகழ்ந்த இடம் காவல் நிலையத்தின் முன்புறம் என்று x குறியிட்டு காட்டப்பட்டுள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: எ.த.சா.ஆ.16 க்கு முன்பாக முதல் வரியில் "26.05.2015 அன்று மதியம் மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனையில் சேர்த்து அன்றைய தினமே மாலை சுமார் 05.45 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக நான் நடவடிக்கை எடுக்கச்சொல்லி ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் வந்திருந்த பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் வேப்பங்குப்பம் காவல் ஆய்வாளராகிய தங்களிடம் புகார் கொடுத்தேன்" என்று உள்ளதா ?

ப: கோவிந்தசாமி ஆய்வாளர் அவர்கள் அலி அக்பரிடமிருந்து பதிவு செய்த கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தில் அவ்வாறு உள்ளது.

கே: அப்படியானால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள தேதியிடப்படாத இரண்டாவது புகாரில் குறிப்பாக முதல் தகவல் அறிக்கையில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் புகாரை

பெற்றதாக கோவிந்தசாமி அவர்கள் எழுதியிருப்பது முன்னுக்கு பின் முரணாக இருக்கிறது என்றால் ?

ப: சரிதான். ஆய்வாளர் கோவிந்தசாமி அவர்களை நான் விசாரிக்கவில்லை.

கே: 1ம் எதிரியான மார்டின் பிரேம்ராஜ் அவர்கள் ஏதேனும் குடியிருப்பு பள்ளிக்கொண்டா காவல் நிலைய எல்லைக்குட்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான ஏதேனும் ஆவணங்கள் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கறீர்களா?

ப: இல்லை.

கே: 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் அவர்கள் 16.06.2015 முதல் 19.06.2015 வரை எங்கு பணியாற்றினார் எந்த மேல் அதிகாரியின் கீழ் பணியாற்றினார் என்பதற்கான ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: தாங்கள் சோதனையிட்டதாக சொல்லப்படும் குடியிருப்பு எவருக்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்பு என்பதை குறிப்பிட்டு சொல்வதற்கான ஆவணம் எதையாவது இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: தங்களால் சோதனை செய்யப்பட்டதாக சொல்லப்படும் குடியிருப்பின் சாவியை முதல் எதிரியான மார்டின் பிரேம்ராஜிடமிருந்து கைப்பற்றியதாகவோ அல்லது அவரிடம் இருந்ததாகவோ ஏதேனும் ஆவணம் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: அ.த.சா.ஆ.42 முதல் 45 வரை ஆகியவை இந்த வழக்கில் சம்பந்தப்படாத முதல் எதிரியை குற்றப்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: அ.த.சா.ஆ.42 முதல் 45 ஆகியவைகளை பார்வையிட்டு ஆய்வு செய்து அந்த ஆவணங்கள் முதல் எதிரியான மார்டின் பிரேம்ராஜ் அவர்களுக்கு என்ன தொடர்பு இருந்ததாக தங்களின் புலன் விசாரணையில் தெரிய வந்தது என்றால்?

ப: Notepad–ம் diary–ம் மார்டின் பிரேம்ராஜின் பெயர் எழுதப்பட்டுள்ளது.

கே: அ.த.சா.ஆ.42 முதல் 45 ஆவணங்களில் காணப்படும் கையெழுத்துக்கள் பல்வேறு நபர்களால் எழுதப்பட்டுள்ளதால் மேற்கண்ட ஆவணங்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி முதல் எதிரியினுடையதுதான் என்பதனை சட்டப்படியான முறையில் நிரூபணம் செய்ததற்கான ஆவணம் ஏதேனும் தங்களால் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா?

ப: தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பவில்லை. ஆவணம் எதையும் சமர்ப்பிக்கவில்லை.

கே: தங்களால் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சா.பொ.1 செல்போனில் ஒரு IMEI எண் இருக்கும் என்றால்?

ப: சரிதான்.

கே: கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் செல்போன் IMEI எண்ணைக்கொண்டு யாருடைய செல்போன் என்று புலனாய்வு செய்து ஆவணங்கள் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: புலனாய்வு செய்ய IMEI எண்ணை வைத்து மட்டும் புலனாய்வு செய்து யாருடையது என்பதை கண்டுபிடிக்க இயலாது அதில் பயன்படுத்தப்பட்ட சிம் கார்டை வைத்துதான் கண்டுபிடிக்க முடியும்.

கே: தங்களால் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சா.பொ.1 செல்போனில் ஏதேனும் சிம்கார்டு இருந்ததா?

ப: சிம் கார்டுடன் சேர்த்துதான் செல்போனை அனுப்பினோம்.

கே: தங்களால் கைப்பற்றப்பட்டுள்ள சா.பொ.1–ல் செல்போனில் இரண்டு சிம்கார்டுகள் இருந்ததாக பதிவு செய்திருக்கறீர்களா?

ப: ஆம்.

கே: அப்படியானால் அந்த சிம்கார்டுகளின் எண்கள் என்ன என்று உரிய தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு அனுப்பி உறுதி செய்து அதன் ஆவணத்தை இந்த நிதிமன்றத்தில் கொடுத்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சா.பொ.1 செல்போன், சா.பொ.2 ஆகியவைகளை உரிய நிறுவனத்திற்கு அனுப்பி ஆய்வு செய்து மேற்கண்ட செல்போனில் உள்ள சிம்கார்டுகள் எவருடைய பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதனை புலனாய்வு செய்து ஆவணங்கள் சமர்ப்பத்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: தங்களால் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சா.பொ.1 முதல் 5 ஆகியவை இந்த வழக்கிற்கும் குறிப்பாக முதல் எதிரி மார்டின் பிரேம்ராஜுடன் எந்த தொடர்பும் இல்லை. தொடர்பற்ற சான்று பொருட்களை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: தங்களின் புலனாய்வின் போது 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் பயன்படுத்தியதாக சொல்லப்படும் காவலர் குடியிருப்பு Allotement Register–ஐ பறிமுதல் செய்து இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய காவலர் குடியிருப்புகளுக்கு பொறுப்பான அதிகாரியான டிஎஸ்பி மற்றும் எஸ்பி ஆகியோரை விசாரித்து தங்களால் சோதனை செய்யப்பட்டதாக சொல்லப்படும் குடியிருப்பை மார்டின் பிரேம்ராஜ் பயன்படுத்திக்கொண்டிருந்தார் என்பதற்கான ஏதேனும் ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பத்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: Woman missing வழக்கில் காணாமல் போனதாக சொல்லப்படும் பவித்ரா என்பவரின் கணவர் மற்றும் கௌஷ் பாஷா மற்றும் அலி அக்பர் ஆகியோரை செல்போன் எண்களை பெற்று அந்த செல்போன் எண்கள் 16.06.2015 முதல் 27.06.2015 வரை யார் யாரிடம் பேசியிருக்கிறார்கள் என்பதனை இந்த நீதிமன்றத்தில் ஆவணமாக சமர்ப்பித்திருக்கறீர்களா ?

ப: அழைப்பு விவரங்களை Call details வேண்டுகோள் கடிதம் தரப்பட்டது. அது தொடர்பான ஆவணங்கள் என்னுடைய விசாரணை காலத்தில் கிடைக்காததால் அதனை சமர்ப்பிக்கவில்லை.

கே: எஸ்எஸ்ஐ ரவி அவர்களின் செல்போன் எண்ணை பெற்று அதன் CDR பெறுவதற்கான கடிதம் கொடுத்ததை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா ?

ப: இல்லை.

கே: மேற்கண்ட எஸ்எஸ்ஐ ரவி அவர்களின் செல்போன் எண்ணின் CDR–ஐ பெற்று ஆய்வு செய்திருந்தால் இந்த வழக்கினுடைய பல உண்மை தகவல்கள் பெறுவதற்கான வாய்ப்பு இருந்ததை தாங்கள் நடைமுறைபடுத்தியதாக ஏதேனும் ஆவணம் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா ?

ப: இல்லை.

கே: மேற்கண்ட எஸ்எஸ்ஐ ரவி அவர்களின் செல்போன் CDR ஐ பெற்றிருந்தால் ஆம்பூர் எம்எல்ஏ அஸ்லம் பாஷாவுடனும் 16.06.2015 முதல் 30.06.2015 வரை எத்தனை முறை மேற்கண்ட எம்எல்ஏவுடனும் கௌஷ் பாஷாவுடனும் பேசியிருக்கிறார் என்பதனை ஆய்வு செய்யவில்லை என்றால் ?

ப: CDR பெறாததால் ஆய்வு செய்யவில்லை.

கே: CDR பெறுவதற்கு தாங்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை உறுதி செய்வதற்கான ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: அதனால் தாங்கள் எஸ்எஸ்ஐ ரவியின் செல்போன் சிடிஆர்–ஐ பெறுவதற்கோ அல்லது கௌஷ் பாஷா செல்போனின் சிடிஆர்ஐ பெறுவதற்கோ தாங்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ஆனால் இந்த நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்ததாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: தங்களால் K.M.அலிஅக்பர் (Defact complainant) என்பவரிடமிருந்து பெறப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தில் இவ்வழக்கு சம்பந்தமாக "நான் ஒரே புகார் FIR ல் மட்டும்தான் கையெழுத்து போட்டேன் என்று கூறியிருக்கிறார் என்றால்?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட சூழலில் ஆய்வாளர் கோவிந்தசாமி அவர்களால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 01.07.2015 தேதியிட்ட பட்டியலில் வரிசை எண் 16 ல் முதல் புகார் என்று குறிப்பிட்டு இருப்பதையும் அ.த.சா.ஆ.1 ல் தேதியிடப்படாத ஒரு புகார் இருப்பதையும் இந்த நீதிமன்றத்தில் உள்ள ஆவணங்களின் மூலம் தெரிய வருவதால் தங்களின் புலன் விசாரணைக்கு உதவ வேண்டும் என்ற தவறான எண்ணத்தில் ஒரே புகார் என்று குறிப்பிட்டிருப்பதால் இரண்டு புகார்கள் ஒரே நாளில் ஒன்று தேதியிட்டும் மற்றொன்று தேதியிடப்படாமல் கொடுத்திருக்கிறார்கள் என்றால் ?

ப: கோவிந்தசாமி ஆய்வாளரிடம் இரண்டு புகார் கொடுத்ததாக நீதிமன்றத்தில் உள்ள ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது. இது குறித்து நான் விசாரிக்கவில்லை.

கே: இந்த வழக்கு தொடர்பாக பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் வாகனத்தின் Vehicle diary/log book–ஐ பறிமுதல் செய்து இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: இந்த வழக்கில் தொடர்புடையதாக சொல்லப்படும் வாகனத்தை பறிமுதல் செய்து இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: இந்த வழக்கு தொடர்பாக கொடூரமாக தாக்கப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் எதை வைத்து தாக்கினார்கள் என்ற சான்றுகளை பறிமுதல் செய்து இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: 1ம் எதிரியான மார்டின் பிரேம்ராஜ் பள்ளிக்கொண்டா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட எந்த குடியிருப்பும் ஒதுக்கப்படவில்லை, அப்படி ஒதுக்கப்பட்டிருந்தால் ஒதுக்கீடு செய்யும் உயர் அதிகாரிகளிடம் வாக்குமூலம் பெற்று ஒதுக்கீட்டுக்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: 1ம் எதிரியான மார்டின் பிரேம்ராஜ் மற்றும் பிற எதிரிகள் ஒரே காவல் நிலையத்தை சார்ந்தவர்கள் அல்ல ஒவ்வொருவரும் ஒவ்வொரு காவல் நிலையத்தை சார்ந்தவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ள எதிரிகள் அனைவரும் உயர் அதிகாரிகளின் ஆணைக்கிணங்க டிஎஸ்பி கணேசன் அவர்களுடன் பணியில் இருந்தார்கள் என்றால்?

ப: விசாரணையில் பணி குறித்து விவரங்கள் பெறப்படாததால் சொல்ல இயலவில்லை.

கே: சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 16.06.2015 முதல் 19.06.2015 வரை நேரடி உயர் அதிகாரியான கணேசன் அவர்களின் தலைமையின் கீழ் வழக்கின் எதிரிகள் பணியாற்றினார்கள் என்றால்?

ப: பணி விவரங்கள் குறித்து ஆவணங்கள் எதுவும் இல்லாததால் சொல்ல இயலவில்லை.

கே: இறந்துபோன ஷமீல் பாஷா எந்த சூழலிலும் சட்டத்திற்கு புறம்பாக அடைத்து வைக்கப்படவில்லை, ஏன் என்றால் எந்த குடியிருப்பில் வைத்திருந்ததாக வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த குடியிருப்பில் வழக்கின் எதிரிகள் எவருக்கும் ஒதுக்கப்பட்டதாக ஆவணங்கள் இல்லை, அதனால் தாங்கள் இது குறித்து உங்களுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டு ஏதும் சொல்லவில்லை என்றால்?

ப: அது குறித்து எந்த கேள்வியும் எழவில்லை.

கே: தங்களின் புலன் விசாரணையில் விசாரித்து ஷமீல் பாஷாவை கொடூரமாக தாக்கி காயம் ஏற்படுத்தியதாக கூறுவதற்கான எந்த சாட்சியமும் இல்லை இந்த நீதிமன்றத்தில் பொய்யான வாக்குமூலங்களை தாக்கல் செய்திருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: தங்களின் புலன் விசாரணையில் வழக்கின் எதிரிகள் ஷமீல் பாஷாவை அடித்ததையோ நேரடியாக பார்த்தேன் என்பதற்கான சாட்சியம் பதிவு செய்யப்படாததால் தாங்கள் இந்த நீதிமன்றத்தில்

பொய்யான வாக்குமூலங்களை தாக்கல் செய்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: 19.06.2015 அன்று 13.00 மணிக்கு Bind over memo–ல் கையெழுத்திட்டு ஷமீல் பாஷாவை நல்ல முறையில் அழைத்து செல்வதாக கையெழுத்திட்டுள்ள கௌஷ் பாஷாதான் ஷமீல் பாஷாவிற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள காயத்திற்கு பொறுப்பானவர் ஆவாரே தவிர வழக்கின் எதிரிகள் எந்த சூழலிலும் பொறுப்பானவர்கள் அல்ல என்றால்?

ப: சரியல்ல.

கே: குறிப்பாக 16.06.2015 முதல் 19.06.2015 வரை வழக்கின் எதிரிகள் உயர் அதிகாரியான டிஎஸ்பி கணேசன் அவர்களுடன் பணியாற்றிக்கொண்டிருந்ததால் ஷமீல் பாஷாவை 19.06.2015 அன்று 13.00 மணிக்கு பிறகு ஏற்பட்டுள்ளதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள காயங்கள் வழக்கின் எதிரிகளால் ஏற்படுத்தப்பட்டவை அல்ல. தாங்கள் இந்த நீதிமன்றத்தில் பொய்யான வாக்குமூலங்களை சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: தங்களால் பெறப்பட்ட ஆம்பூர் அரசு மருத்துவமனை மருத்துவ ஆவணங்கள் ஷமீல் பாஷா மரணத்திற்கு பின் பல்வேறு மருத்துவ குறிப்புகளை திருத்தி தங்களுக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள் காரணம் ஷமீல் பாஷாவிற்கு கௌஷ் பாஷாவால் உருவாக்கப்பட்ட காய குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால்?

ப: சரியல்ல.

கே: இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்பான சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் திட்டமிட்டு வழக்கின் எதிரிகளை குற்றப்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றால்?

ப: சரியல்ல.

கே: வழக்கின் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை அவர்கள் அனைவரும் டிஎஸ்பி கணேசன் அவர்களுடன் பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள் என்பதை தெரிந்திருந்தும் இந்த நீதிமன்றத்தில் அவர்கள் பணி குறித்து ஆவணங்கள் சமர்ப்பிக்காமல் பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது என்றால்?

ப: சரியல்ல.

கே: 26.06.2015 மாலை ஷமீல் பாஷா இறந்துபோன பிறகு ஷமீல் பாஷாவின் மாமனார் கௌஷ் பாஷா மற்றும் த.மு.மு.க கட்சியின் எம்எல்ஏ அஸ்லம் பாஷா மற்றும் த.மு.மு.க முக்கிய பொறுப்பில் உள்ள ஷமீல் அகமது ஆகியோர் உருவாக்கிய சமூக சீர்குலைவை தடுக்கும் பொருட்டு உரிய நபர்களின் மீது நடவடிக்கை எடுக்காமல் மேற்கண்ட அரசியல்வாதிகளின் தலையீட்டால் வழக்கின் எதிரிகளின் மீது பொய்யான வழக்கு புனைந்திருக்கறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: வழக்கின் எதிரிகளை வேண்டுமென்றே வழக்கில் சேர்க்க வேண்டும் என்ற மேற்கண்ட அரசியல் பிரமுகர்கள் அழுத்தத்தின்

காரணமாக வழக்கின் எதிரிகள் மீது பொய்யான வழக்கு தொடர்ந்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால்?

ப: சரியல்ல

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார். மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.25 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.06.24 17:47:40 +0530